# உங்கள் மேற்கூரை சோலாரை பராமரிப்பது எப்படி?



மேற்கூரை சோலாரின் தினசரி மின்உற்பத்தி விவரங்களை சேகரித்துவைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்கூரை சோலார் மீது படியும் தூசி துகள்களின் அளவைப் பொருத்து, சுத்தம் செய்யும் கால இடைவெளியைத் திட்டமிடுதல் வேண்டும். பொதுவாக வாரம் ஒரு முறை அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை சுத்தம் செய்வது நல்லது.

சோலார் பேனல்களின் கண்ணாடி மேல் கீறல்கள் விழாமல் இருக்க மென்மையான பொருட்களைக் (துணி அல்லது ஸ்பாஞ்ச் (sponge) ) கொண்டு துடைப்பது நல்லது.

நீங்கள் அடிக்கடி சுத்தம் செய்யும் பட்சத்தில், தூசி துகள்களை அகற்ற பேனல்கள் மேல் வெறும் தண்ணீர் மட்டும் ஊற்றினால் போதுமானது.

வயர்களானது எலி போன்ற சிறு விலங்குகள் மற்றும் பூச்சிகள் மூலம் பழுதடையாத வண்ணத்தில் உள்ளனவா என்பதை, அவ்வப்போது சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

ஜங்சன் பாக்ஸ்-ல் உள்ள ஃப்யூஸ்கள் (fuses) சரியான நிலையில் உள்ளனவா என்பதை அவ்வப்போது உறுதி செய்து கொள்ள வேண்டும்.

காரீய- அமில பேட்டரிகளை (lead-acid batteries) பயன்படுத்தும்பொழுது, எலெக்ட்ரோலைட் (electrolyte) சரியான அளவில் உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். பேட்டரிகளை டாப் அப் (top up) செய்வதற்கு எப்பொழுதும் டிஸ்டில்டு வாட்டரையே (distilled water) பயன்படுத்த வேண்டும்.

**சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்டு சிவிக் ஆக்ஷன் குரூப் (சி.ஏ.ஜி.)**
*புதிய எண். 246, பழைய எண். 277-B, டி.டி.கே. ரோடு, (ஜெ.ஜெ.ரோடு), ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.*
*தொலைபேசி 91-44-2466 0387/2499 4458*